**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE OF ATTUR**

**SC.No. 278/2018**

**Deposition of: PW -1 (LW - 1)**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **:** அங்குசாமி | **Father Name** | **:** |
| **Village** | **:** | **Taluk** | **:** |
| **Nationality** | **:** | **Religion** | **:** |
| **Calling** | **:** | **Age** | **:** |

**Solemnly affirmed by in accordance with the provision of Oath Act 44 of 1969 Date: 25.09.2023 at 05.40 p.m to 06.15 p.m .**

எதிரிகள் வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்**.**

<u>முதல் விசாரணை**:**</u>

1) நான் தற்போது வீரகனூர் 1 வது வார்டில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஏற்கனவே எங்களுக்குள் தண்ணீர் பைப் எடுப்பது சம்மந்தமாக பிரச்சணை இருந்தது. ஒரு நாள் என் மகளுக்கு உடல் நிலை சரியில்லை என மருத்துவமனைக்கு எடுத்து சென்றேன். அப்போது சாப்பிட்ட தட்டை எடுதது 1-ம் எதிரி தனராஜ் மேலே ஊற்றினார். ஏன் அவ்வாறு ஊற்றினீர்கள் என்ற கேட்டதற்கு அப்படி தான்டா ஊத்துவேன் தேவடியா பையனே உன்னால்தான் பைப் போடுவது நின்றவிட்டது என சொல்லிவிட்டு பைப்பை எடுத்து என் தலையில் அடித்தார். பிறகு வரதம்மாள் மற்றம் பழனிசாமி ஆகியோர் என்னை கீழே தள்ளி அடித்தார்கள். மாசிலாமணி உருட்டு கட்டையால் முதுகு மற்றும் காலின் பின்புறம் அடித்தார். அருடைய தங்கை சிலம்பரசி என்னை செருப்பால் அடித்தார். அவருடைய அப்பா அங்கமுத்து என்னை இவனை விட்டால் தலைவலிதான் இவனை அடித்து கொள்ளுங்கள் என்று சொன்னார். என்னை தாக்க எதிரிகள் பயன்படுததிய சான்று பொருள் இரும்பு பைப் மற்றம் கட்டை சாபொ.**1** மற்றும் சாபொ**.2** ஆகும்.

2) மேற்படி தனராஜ் இரும்பு பைப்பால் இரண்டு கைகளிலும் அடித்ததில் எனது இரண்டு கைகளும் உடைந்துவிட்டது. அதற்கு கையில் பிளேட் வைத்து அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மேலும் தேவடியா பையா செத்து போடா என என்னை உடல், கை, கால் எல்லாம் தாக்கி ரத்தக்காயம் ஏற்பட்டது. நான் கீழே விழுந்துவிட்டேன். செத்துவிட்டேன் என கருதி அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டார்கள். பிறகு அரசு மருத்துவமனைக்க 108 ஆம்புலன்ஸ் மூலம் என்னை அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கைரேகை என்னுடையதுதான். என்னால் கைகளால் எழுதமுடியாததால் கைரேகை வைத்தேன். அது அதசாஆ**.1** ஆகும்.

குறுக்கு விசாரணை

1) சாட்சி அல்லிமுத்து என் சின்ன தாத்தாவின் பேரன். சாட்சி அமுதா என் ஊர்க்காரர் ஒரே வீதி. சாட்சி ரவி எங்கள் வீட்டிற்கு பக்கத்து தெரு. சாட்சி சங்கீதா என் தம்பியின் மனைவி. சாட்சி வேலுசாமி என் அப்பா, சாட்சி தேவி என்னுடைய மனைவி. சாட்சி வடிவேல் என்னுடைய தம்பி. சாட்சி தமிழரசு என் உறவினர். என் வீடு தெற்கு பார்த்த வாசல் என்றால் தவறு வடக்கு பார்த்த வாசல். என்னுடைய வீட்டில் இருந்து வெளியே வரவேண்டும் என்றால் என்னுடைய வீட்டிற்கு தென்திசை மற்றம் மேற்கு திசையில்தான் வழி. எதிரிகளின் வீடு கிழக்கு பார்த்த வாசல். எதிரி வீட்டிற்கும் வெண்ணிலா வீட்டிற்கும் 3 அடி மட்டும் தான் இடைவெளி என்றால் தவறு 10 அடி இருக்கும்.

2) எதிரிகளும் அவர்கள் வீட்டில் இருந்து வெளியே வரவேண்டும் என்றால் தெற்கு புற சந்தின் வழியாகதான் வரவேண்டும் என்றால் சரிதான். என்னுடைய வீடு பிரச்சனையின் போது மேற்கு பார்த்த வாசல்தான் இருந்தது. என் வீட்டிற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அரை கிலோமீட்டருக்கும் குறைவாக இருக்கும். அடிப்பட்டவுடன் காவல் நிலையம் சென்று எழுத்து பூர்வமான புகார் கொடுத்தேனா என்றால் நான் மருத்துவமனைக்குதான் முதலில் சென்றேன். நான் வீரகனூர் மருத்துவமனைக்கு சென்றேன். ஆனால் 108 மூலம் அவர்கள் தான் ஆத்தூர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள்.

3) சம்பவம் நடந்து 2 நாட்கள் கழித்து தான் காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள். காவல் துறையினர் என்னை விசாரிக்கும் போது மாசிலாமணி என்னை எந்த பக்கம் அடித்ததாக குறிப்பிட்டு எந்த கால் என்று சொல்லவில்லை என்றால் காலில் அடித்ததாகதான் சொன்னேன். குறிப்பிட்டு எந்த கால் என்று சொல்லவில்லை. மேலும் 4ம் எதிரி என்னை செருப்பால் அடித்ததாக சொல்லியுள்ள நிலையில் எந்த பக்கம் கண்ணத்தில் அடித்தார் என குறிப்பிட்டு நான் சொல்லவில்லை.

4) நான் முதலில் மருத்துவரிடம் என்னை 2 நபர்கள் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 5 பேரும் சேர்ந்துதான் அடித்தார்கள். சம்பவ நடந்த இடம் என் வீடு என மருத்துவரிடம் சொன்னேன். நான் மருத்துவரிடம் குச்சியால் அடித்ததாகதான் சொன்னேன் என்றால் அது தவறு. உருட்டு கட்டை என்றுதான் சொன்னேன். குச்சி மெல்லியதாக இருக்கும். உருட்டு கட்டை தடிமனாக இருக்கும் என்றால் சரிதான். மேற்படி தாக்குதலை அருகில் விலக்கினார்கள் என சொல்லியுள்ள நிலையில் அவர்கள் யார் யார் என்று என்னுடைய வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் அவ்வாறு யாரும் விலக்க முன்வரவில்லை.

5) சம்பவத்திற்கு முன்பு இருந்தே எங்களுக்கும் எதிரிகளுக்கும் பேச்சுவார்த்தை கிடையாது. எனக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் இல்லை. மேற்படி தனராஜை நானும், வடிவேல், தேவி, சங்கீதா ஆகியோர்கள் தாக்கியதாக எங்களுக்கு எதிராக புகார் கொடுத்துள்ளார் என்றால் அவ்வாறு இல்லை. மேற்படி புகாரின் தொடர்சியாக புகார் பதிவு செய்யப்பட்டு அதில் நாங்கள் முன்ஜாமின்

பெற்றோம் என்றால் அது தவறு. சம்பவம் நடந்த 2வது நாள் காவல் துறையினர் என்னை மருத்துவமனையில் வைத்துதான் விசாரித்தார்கள். வேறு எங்கும் விசாரிக்கவில்லை. மேற்படி சம்பவம் நடந்த 2வது நாள் சம்பவ இடத்தில் வைத்துதான் காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள் என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) சம்பவம் நடந்ததும் நான் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தும் பொய்யான புகார் என்பதால் சம்பவம் நடந்ததாக சொல்லும் 2 நாட்களாக என்னை வந்து விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் காவல் நிலையத்தில் போராட்டங்கள் செய்து அவர்களின் கட்டாயத்தின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் சொல்வது போன்று சொன்ன தேதியில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் எனக்கு ஏற்பட்ட காயம் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது ஏற்பட்ட விபத்தின் காரணமாக எற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக புகாரை கொடுத்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு. ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் யாதொரு சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan,**
**Assistant Sessions Judge, Attur.**